# இரட்சிப்பு
RATCHIPPU

RATCHIPPU = SALVATION

Volume-13 | April - 2024 | Issue-11

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-



## இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள். தபசு காலத்தை நாம் சிறப்பாக ஆசரிக்க கிருபைசெய்த கர்த்தருக்கு நன்றிகளை செலுத்துவோம். உயிர்த்தெழுதலின் வல்லமையை பெற்றுக் கொண்டவர்களாக தொடர்ந்து தூய வாழ்வு வாழ நம்மை அர்ப்பணித்துக் கொள்ளுவோம். நம் நாட்டின் பாராளுமன்ற தேர்தல் ஏப்ரல் 19ம் தேதி துவங்கி ஜுன் 1ம் தேதி வரை 7கட்டங்களாக நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக ஏப்ரல் 19ம் தேதி தேர்தல் நடைபெறவிருக்கிறது. இந்தியா முழுவதும் தேர்தல்கள் நியாயமான, நேர்மையான முறையில் நடைபெற, இ.வி.எம். இயந்திர முறைகேடுகள் தடுக்கப்படவும், மக்களின் நல்வாழ்வில் கரிசனை கொண்ட தலைவர்கள் ஆட்சிக்கு தேர்ந்தெடுக்கப்படவும் ஜெபிக்க, உழைக்க, போராட நம்மை அர்ப்பணிப்போம்.

'ஜெப-ஜன்னல்' - ஜெப நேரங்கள் (ஏப்ரல் 12, 19, 26), 'அனைவரும்-ஊழியத்தில்' - கைபிரதி ஊழிய திட்டம், இரட்சிப்பு வேதாகம போட்டிகள் ஆகியவற்றில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். நமது பத்திரிக்கை ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், கிராம ஊழிய ஐக்கியங்கள், திருச்சபை ஊழியங்கள் உள்ளிட்ட நம் இயக்குநரின் அனைத்து ஊழியங்களும் சிறப்பாக நடைபெற ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (தொடர்பு விபரம், Online வங்கி விபரம், UPI விபரம் மற்றும் QR Code ஆகியவை பக்கம் 18-ல் தரப்பட்டுள்ளன). தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---


**வேத-வரிகள்-160** **2பேதுரு - 3:18, 1:2**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு


| | |
|---|---|
| **சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**<br>கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையையும் அவரை அறிகிற அறிவையும் அறிந்து கொள்வீர்களாக. பராபரனையும் கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் சம்பூரணமாகக்கடவது. | **பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**<br>கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. |
| **திருவிவிலியம் (பொது-1995)**<br>ஆண்டவரும் மீட்பருமான இயேசு கிறிஸ்துவின் அருளிலும் அறிவிலும் வளர்ச்சியடையுங்கள். கடவுளையும் நமது ஆண்டவராகிய இயேசுவையும் நீங்கள் அறிவதன் வாயிலாக உங்களுக்கு அருளும் நலமும் பெருகக்கடவது. | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**<br>கிருபையிலும், கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை பற்றிய அறிவிலும் வளர்ச்சியடையுங்கள். தேவனை உண்மையாக அறிவதன்மூலமும் கர்த்தராகிய இயேசுவின் மூலமும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் கொடுக்கப்படுவதாக. |

வசன தியானம்-150

# எது பெருமைக்குறிய விஷயம்?



கடவுளை அறிந்து
அவரைக் குறித்த அறிவில்
வளர்வதே



Jeremiah-9:24 எரேமியா-9:24

மேன்மைபாராட்டுகிறவன் என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதை குறித்தே மேன்மைபாராட்டக்கடவன். எரேமியா-9:24

கடவுளை அறிந்து உணர்ந்து, அவரைக் குறித்த அறிவில் வளர்ந்து பெருகுவதே கிறிஸ்தவ விசுவாசிகளின் மேன்மையாகும். நாம் உண்மையில் கடவுளை அறிந்த வர்களாய் இருக்க வேண்டுமானால் அவருடன் நெருக்கமான உறவைக் கொண்டி ருக்க வேண்டும். கடவுளைப் பற்றிய அறிவில் வளர்வது என்பது நாம் கடவுளைப் பற்றிய உண்மைகளை அறிந்து வைத்திருப்பது என்று அர்த்தமல்ல. இறையிய லாளர்கள் பலர், கடவுளைப் பற்றிய உண்மைகளை நன்கு புரிந்துகொண்ட வர்கள்தான் ஆனால் கடவுள் மீது நம்பிக்கை இல்லாதவர்கள். நியாயத்தீர்ப்பு நாளில் கிறிஸ்து அவர்களிடம், ‘‘நான் உங்களை ஒருபோதும் அறிந்திருக்க வில்லை; என்னைவிட்டு அகன்று போங்கள்’’ (மத்-7:23) என்றுதான் சொல்லுவார்.

கடவுளை அறிந்து கொள்வது என்பது அவருடன் உறவு கொள்வது. கடவுளைப் பற்றிய அறிவில் வளர்வது என்பது அவருடைய உறவில் வளர்வதாகும். நாம் அவரை அறிந்து கொள்ளும் வகையில் கடவுள் தமது கிருபையினாலே, சிலுவை யில் சிந்திய இரத்தத்தினாலே நம்மை தமது உறவினராக ஆக்கியுள்ளார்.

கடவுளை நாம் அறிந்துகொள்ளுவதற்கான முதல் படி விசுவாசத்தின் வழியான ‘இரட்சிப்பு’ (எபே-2:8). இரட்சிக்கப்படாதபோது, நாம் தேவனுக்கு விரோதிகளாக, அவருடைய நீதி நியாயங்களை அறியாதவர்களாக இருந்தோம் (ரோம-5:10), ஆனால், இப்போது அவரது உறவுகளாக இருக்கிறோம் (யோவா-15:14-15).


மட்டுமல்ல, வேத வசனங்களை தியானித்து, ஜெபிப்பதன் மூலம் இந்த உறவு வளர்கிறது; கடவுள் தமது நீதி-நியாயங்களை, தமது இருதயத்தின் அன்பை நமக்குத் தெரிவிக்கிறார். ஜெபத்தில் நம்முடைய இருதயங்களை நாம் அவருக்கு தெரிவிக்கிறோம். நமது, நண்பர்களுடன் நாம் நீண்ட நாட்கள் பேசாதபோது, நட்பு தடைபடுவது போலவே, நாம் வேதத்தை தியானித்து ஜெபிக்காமல் இருப்பதால் கடவுளுடனான நமது உறவும் தடைபடுகிறது. கடவுளின் வார்த் தையை புறக்கணிப்பது பாவமாகும்; அந்தப் பாவம் நம்மை அவரிடமிருந்து பிரிக்கிறது. நம்முடைய பாவங்களை அறிக்கை யிட்டு மனந்திரும்புவதன் மூலமும் (1யோவா-1:9), இடைவிடாத வேத-வசன-தியானம் (எஸ்-7:10) மற்றும் தொடர்-ஜெபத்தில் நிலைத்திருப்பதன் மூலமும் நாம் கடவுளின் உறவிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர்ந்து பெருகி அதைக்குறித்து மேன்மை பாராட்ட முடியும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



REV. DHARMARAJA

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழியவு இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதி வு ஊழியங்கள், சென்னை–93. தென்னிந்தியா.

தேவசெய்தி...



சகோ. ஜான்ஸி செல்வின்

# தேவனை அறிகிற அறிவு

2பேதுரு-1:2

THE KNOWLEDGE OF GOD

**Sis. C. Johnsy Selwyn** M.S(IT)
VIRUDHUNAGAR, TAMILNADU, SOUTH INDIA

**தேவனையும், கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது. 2பேது-1:2**

ஆண்டவரும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் வாழ்ந்துக்கள். அருமையான இந்த பத்திரிக்கைச் செய்தியுடன் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். தியானம் செய்வதற்காக தெரிந்துகொள்ளப்பட்ட 2பேதுரு-1:2 வசனத்தை மையமாகக் கொண்டு நாம் சற்று நேரம் வேதவசனங்களைத் தியானிப்போம்.

**தேவனை அறிகிற அறிவினால் சமாதானம்:**

இவ்வுலகில் உள்ள அனைத்து மக்களும் சமாதானத்தைத் தேடி எங்கெங்கோ அலைந்துகொண்டிருக்கையில், தேவபிள்ளைகளாகிய நம் வாழ்வில் சமாதானம் பெருகும்படிக்கு அருமையான இந்த வேத-வசனத்தின் வாயிலாக அப்போஸ்தலனாகிய பரி. பேதுரு நமக்கு ஒரு இரகசியத்தைக் கற்றுக் கொடுக்கிறார். அந்த ரகசியம் என்னவென்றால் தேவனையும், இயேசு கிறிஸ்துவையும் அறிகிற அறிவினால் மட்டுமே நாம் சமாதானம் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதேயாகும்.

பேதுரு, தமது 2ம் நிருபத்தில் - 2பேதுரு-3:18ல், ‘‘நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்.’’ என்று சொல்லி தேவனை அறிகிற அறிவில் வளரும்படி நம்மை வலியுறுத்துகிறார். 2பேதுரு-1:2ல் அவர், ‘‘தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் **சமாதானமும்** பெருகக்கடவது.’’ என்று சொல்வதின் மூலம், ஒவ்வொரு நாளும் தேவனை அறிகிற அறிவில் நாம் வளர வளர, சூழ்நிலைகளைத் தாண்டி நம்முடைய இருதயங்களில் **தேவசமாதானமும்,** தேவகிருபையும் பெருகிக்கொண்டே இருக்கும் என்பதை உறுதிப்படுத்துகிறார். ஆக, நம் இருதயத்தில் தேவசமாதானம்

ஆளுகை செய்யவில்லை என்றால் தேவனை அறிகிற அறிவில் நாம் இன்னும் வளரவில்லை என்பது இவ்வசனங்கள் மூலம் தெளிவாகப் புலப்படுகிறது.

பள்ளியிலோ கல்லூரியிலோ படிக்கக்கூடிய நம் பிள்ளளகள் தங்களுடைய தேவைகளைக் குறித்து ஒரு நாளும் கவலைப்படமாட்டார்கள்; ஏனென்றால், தன் தகப்பன் (தன் பெற்றோர்) தன்னை ஒரு நாளும் கைவிடமாட்டார், தன் தேவைகளை சந்திப்பார் என்று, தகப்பன் குறித்து அவர்கள் அனுபவப்பூர்வமாக அறிந்திருக்கிறதினால் மாத்திரமே அவர்கள் சமாதானத்தை பெற்றுக்கொண்டவர்களாய் இருக்கிறார்கள்.

**தேவனை அறிகிற அறிவினால் நித்திய-ஜீவன்:**
இயேசு, பிதாவை நோக்கி ஜெபம் பண்ணும்போது, ''ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே **நித்திய ஜீவன்**'' என்று சொல்லுகிறதை யோவா-17:3ல் வேதம் தெளிவாக சொல்லுகிறது. அப்படியானால், ஒவ்வொரு நாளும் அனுபவப்பூர்வமாக அவரை அறிகிற அறிவில் வளருவதும், அவரோடுகூட எப்பொழுதும் இயேசுவைப்போல உறவாடி மகிழ்வதுமே நித்திய ஜீவன் ஆகும் என்பதை உணர்ந்துகொள்ள அழைக்கப்படுகிறோம்.

இதே காரியத்தை விளக்க பரி. பேதுரு சொல்கிறார், ''நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே **ஜீவனுக்கும் தேவபக்திக்கும்** வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமை, நமக்குத் தந்தருளினது.... ....இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, **திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு,** மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.'' (1பேது-3:3,4) என்று. ஆக, தேவனை அறிகிற அறிவினாலே நமக்கு அருளப்படுவது திவ்ய சுபாவம் (பரிசுத்த வாழ்வு), தேவபக்தி மற்றும் நித்திய ஜீவன் (நிறைவாழ்வு) என்பது இங்கு தெளிவாகிறது.

**தேவனை அறிகிற அறிவை - ஜெபத்தில் பெற்றுக்கொள்ளுதல்:**
எபே-1:17-19, எபே-3:16-19 வசனங்களில் அப்போஸ்தலனாகிய பரி. பவுலும் இதே காரியத்திற்காக வல்லமையான ஜெபங்களை ஏறெடுப்பதை நாம் காண்கிறோம்.

''நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும்.... ....நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்.'' (எபே-1:16-19)

''நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படவும்.... ....கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து; அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாய், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.'' (எபே-3:16-19).

இதை வாசிக்கிற தேவபிள்ளைகளே! இதே ஜெபங்களை நீங்களும் மனதார

தேவனிடத்தில் ஏறெடுக்கும்போது நிச்சயமாக தேவன், தம்மை அறிந்து கொள்ளும்படி பிரகாசமுள்ள மனக்கண்களை உங்களுக்கும் தந்தருளுவார்.

**தேவனை அறிகிற அறிவை - இயேசுவில் பெற்றுக்கொள்ளுதல்:**

எபி-1:1,2,3 வசனங்களில், ‘‘பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்கு திருவுளம்பற்றினார்.... ....நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்.’’

முற்காலத்தில், தீர்க்கரிசிகளுக்கு தம்மை பங்கு பங்காக வெளிப்படுத்திய தேவன், பின் நாட்களில் தமது குமாரனான இயேசு கிறிஸ்துவின் மூலம் தமது முழுத்தன்மையையும் வெளிப்படுத்தியிருக்கிறதை நாம் அறிந்து கொள்கிறோம்.

யோவான் ஸ்நானன், ‘‘தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்’’ (யோவா-1:18) என்று சொல்ல, இயேசு, ‘‘என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்’’ (யோவா-14:9) என்று சொல்லி, அதை உறுதிப்படுத்தினார். மட்டுமல்ல, யோவா-8:19, 10:30 வசனங்களில், ‘‘நீங்கள் என்னை அறிந்தீர்களானால் பிதாவையும் அறிவீர்கள்’’ ‘‘நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்’’ என உறுதிசெய்கிறார். ஆக, இயேசுவை, அவரது அன்பை, அவரது திருவுள சித்தத்தை தியானிக்க, தியானிக்க பிதாவாகிய தேவனையும், அவரது திருவுள சித்தத்தையும் அறிந்து கொள்ளலாம் என்பது தெளிவாகிறது அல்லவா?

பிரியமானவர்களே! 18வருடம் நிமிரமுடியாமல் கூனியாயிருந்த, பெண்ணுக்கு சுகமளித்த இயேசு, ஜெபாலய தலைவனுக்கு பதிலளிக்கும்போது, ‘‘சாத்தான் 18 வருஷமாய் கட்டியிருந்த இந்த ஆபிரகாமின் குமாரத்தியை அவிழ்த்துவிட வேண்டியதில்லையா’’ (லூக்-13:16) என்று சொல்லி, விசுவாசத்தினால் ஆபிரகாமின் பிள்ளைகளாவர்கள் (கலா:3:7, 3:14, 3:29) பலவீனங்கள், வியாதிகளோடு இருப்பது தேவசித்தம் அல்ல என்ற கருத்தில், பிதாவின் சித்தப்படியே சுகமளிக்கிறார்.

பிதாவாகிய தேவன், இயேசுவை எப்படி நேசித்தாரோ, அதே அன்பில் நம் ஒவ்வொருவரையும் நேசிக்கிறார்; ஆகவே, இன்று நாம் கிறிஸ்துவின் பங்காளிகளாகவும் (ரோம-8:17), தேவபிள்ளைகளாகவும் இருக்கிறோம் (யோவா-1:12) தேவன் தமது நேசகுமாரனையே - சொந்த குமாரனையே நமக்காகக் கொடுத்திருப்பாரென்றால் அவருடைய அன்பு எவ்வளவு பெரிதென்பதை அறிய அறிய நிச்சயமாக உங்கள் ஒவ்வொவரின் வாழ்விலும் சமாதானமும், கிருபையும் பெருகும். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
**சகோ. ஜான்ஸி செல்வின்**

சகோ. சி. ஜான்ஸி செல்வின், விருதுநகர், தமிழ்நாடு, தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 83



# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev.Dr. D. Suresh Rajan

Rev. Dr. சுரேஷ் ராஜன்

## சங்கீதம் – 83

**EPISODE-83**

அன்பான இரட்சிப்பு வாசகர்களுக்கு உயிர்த்தெழுந்த திருநாள் நல்வாழ்த்துக்கள். ‘‘கிறிஸ்து எழுந்திருக்கவில்லை என்றால் எங்கள் பிரசங்கம் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா’’ (கொரி-15:14). உயிர்த்தெழுந்த இறைவன் கொடுக்கும் நம்பிக்கைகாக அவருக்கு நமது போற்றுதல்கள் உரித்தாகட்டும். வெற்றியுள்ள வாழ்வுக்கான தம் அருளை இறைவன் நமக்கு தந்தருளுவாராக.

**முன்னுரை:-**

ஆசாபின் சங்கீதங்களை நாம் பல மாதங்களாக தியானித்து வருகிறோம். இது ஆசாபின் கடைசி சங்கீதமாகும். ஆசாபின் பல சங்கீதங்கள் இஸ்ரவேல் தேசத்தின் மீதான புலம்பல் பாடல்கள் ஆகும். இப்பாடல்களில் இறைவனிடம் நமக்குக் கிடைக்கும் நம்பிக்கையின் உத்திரவாதத்தை பார்க்கமுடிகிறது.

**எதிரிகளின் சூழ்சி:** (வச: 1-8)

இப்பாடலின் வேதாகம பின்னணி குறித்து தெளிவாகத் தெரியவில்லை. மோவாப் மற்றும் அம்மோன் புத்திரர், யூதாவுக்கு விரோதமாக வந்த நிகழ்வு பதிவு செய்யப்பட்டுள்ள 2நாளா 20:1-30 பகுதியில், வசனங்கள் 5முதல் 8வரை, மொத்தம் 10 ஜனக்கூட்டங்கள் இஸ்ரவேலருக்கு எதிராக வந்ததாக சொல்லப்பட்டுள்ளது. இவர்கள் இஸ்ரவேலின் அண்டை நாடுகள். இந்நாடுகள், இஸ்ரவேல் என்ற தேசம் பூமியின் பரப்பில், வரைபடத்தில் இராதபடி அகற்றப்படவேண்டும் என்ற சாத்தானின் திட்டத்தை செயல்படுத்துவதை இங்கு நாம் கான்கிறோம் (வச.2-4). இதே சூழ்ச்சி இன்றுவரை தொடர்வதையும் நாம் காண்கிறோம்.

புதிய ஏற்பாட்டுக் கால மக்களுடன் சேர்த்து நம்மையும் ‘ஆவிக்குரிய இஸ்ரவேலர்’ என வேதாகமம் வருணிக்கிறது. ரோமர் மற்றும் கலாத்தியர் நிருபங்களில் பவுலடிகளார் இதை தெளிவுபடுத்துகிறார். ‘‘உள்ளத்தில் யூதனானவனே யூதன்’’ (ரோம-2:29), நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாயும், வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரராகவும் இருக்கிறீர்கள் (கலா-3.29). இன்று, புறஜாதியானவர்களும் ‘ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவிக்குறிய இஸ்ரவேலராக’ அறியப்பட்டிருக்கிறது சிறப்பானதாகும். ஆக, மாம்சத்தின்படியான இஸ்ரவேலரை யும், ஆவியின்படியான இஸ்ரவேலரையும் (திருச்சபை), ஒழித்துக்கட்டவேண்டும் என்று ஆதிமுதலே கடவுளின் எதிரியாயிருக்கிற பிசாசானவன் கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுவதைக் காணமுடிகிறது. இன்றும் இஸ்ரேல் நாட்டுடன்

போர்புரியும் 'ஹாமாஸ்' அமைப்பினர், ஈராக் சிரியா போன்ற முகமதிய நாடுகளின் ஆதரவுபெற்ற ISIS அமைப்பினர் மற்றும் இந்திய ஆட்சியாளர்களின் ஆதரவுபெற்ற RSS அமைப்பினர், கிறிஸ்தவத்தை பூமியில் இராதபடி அழிக்கும்படி திருச்சபைக்கு பல உபத்திரவங்களை கொடுத்துக்கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே. இச்சூழலில் இச்சங்கீதம் நமக்கு புது நம்பிக்கையைத் தருகிறது.

**எதிரிகளின் வீழ்ச்சி:- (வச.9-18)**

இச்சங்கீதம் Impregatory Psalms என்னும் 'பழிவாங்குதலின் பாடல்கள்' வகையை சேர்ந்தது ஆகும். ஆசாப், இறைவனுடைய எதிரிகளுக்கு எத்தகைய சம்பவங்கள் அல்லது எதிர்-விளைவுகள் ஏற்படவேண்டும் என்று விரும்பினாரோ, அதையே வேண்டுதலாக இப்பாடலில் எழுதியிருக்கிறார். பழைய ஏற்பாட்டு காலத்தில், நடந்த யுத்தங்கள் அந்தந்த நாடுகளின் தெய்வங்களுக்கு இடையேயான யுத்தங்களாகவே கருதப்பட்டன. வெற்றி பெற்ற நாட்டின் கடவுளே வல்லமை மிகுந்த கடவுளாக அறியப்பட்டார். இதற்கு இரு உதாரணங்களை ஆசாப் தருகிறார். ஒன்று, நியாயாதிபதிகள் 7, 8 அதிகாரங்களிலுள்ள சம்பவம். 32,000 பேர் கொண்ட சேனையை 300பேர் கொண்ட சிறிய படை, வாளையும் வில்லையும் பயன்படுத்தாமல் அற்புதமாக ஜெயித்தது. இதில் கிதியோன், மீதியான் பிரபுக்களான ஒரேப், சேபு, சேபா, சல்மூனா ஆகியோரை கொன்றான் என்பதை ''மீதியானியருக்கு செய்தது போலவும்'' என்று வசனம்-9ல் கூறுகிறார். இரண்டாவதாக, நியாதிபதிகள் 4ம் அதிகாரத்திலுள்ள சம்பவம். 'கானானிய ராஜாவான யாபீனின் சேனாபதி சிசெராவை ஒப்புக்கொடுப்பேன்' என்ற ஆண்டவரின் வாக்குப்படி, தெபோராள் மற்றும் பாராக்கின் தலைமையில் சென்ற சேனை எதிரிகளை முறியடித்தது. ''சிசெராவும், யாகேல் என்ற பெண்ணால் கொல்லப்பட்டான்'' என்று வசனம்-10ல் கூறுகிறார். இந்த உதாரணங்களை மேற்கோள் காட்டி, ஆண்டவரே! எங்கள் எல்லா எதிரிகளிடமிருந்தும் எங்களைக் காப்பாற்றும்; எங்கள் எதிரிகளை அவமானப்படுத்தி வீழ்ச்சியுறச் செய்யும் எனக் கூறுகிறார்.

அன்பான தேவ மக்களே! நம்மையும் வேரோடு அழித்துவிடவேண்டும் என்று எத்தனை சதிகள் வந்தாலும், நாமும் உறுதியோடு தேவனைப் பற்றிக்கொண்டு காத்திருக்கும்பொழுது கர்த்தர் நிச்சயமாக நமக்கும் விடுதலையை கொடுப்பார், எதிரிகளை கலங்கப்பண்ணுவார், நம் கண்முன் இல்லாதபடி அழித்துப்போவார்.

**இறவனின் மாட்சி:-**

இச்சங்கீதத்தின் கருத்துகள் ''பிதாவே, இவர்களுக்கு மன்னியும்'' என்று சிலுவையில் வேண்டுதல் செய்த இயேசுவின் போதனைகளுக்கு விரோதமாய் இருப்பது போல் தோன்றுகிறது; ஆனால், உண்மை என்னவெனில், இறைவனின் மாட்சியை எல்லா மக்களும் அறிந்துகொள்ளவேண்டும், யேகோவா தேவன் பூமியனைத்திற்கும் இராஜாதி இராஜனும் கர்த்தாதி கர்த்தருமானவர் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டும் என்ற ஆசாபின் மனக்குமுறலின் வெளிப்பாடுதான் இது என்பதே. தேவராஜ்யத்துக்கு விரோதமான எந்த சக்தியும் வீழ்ச்சியுறும்; எனவே, நாமும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு எதிரான சக்திகள் அனைத்தும் மடங்கடிக்கப்பட, வேண்டுதல் செய்வோம்.

முடிவுரை:-

இறையரசு நிறுவப்படுவதை உலகின் எந்த சக்தியாலும் தடுக்க முடியாது. இறைமக்கள் தேவசித்தம் செய்பவர்களாயும், பிசாசின் தந்திரங்களுக்கு விலகியோடி தங்களை பரிசுத்தத்தில் காத்துக்கொள்கிறவர்களாயும், திறப்பின் வாசலில் நின்று தேசத்தின் ஷேமத்துக்காக வேண்டுதல் செய்கிறவர்களாயும் இருக்க தேவன் விரும்புகிறார். எனவே நாமும், நம் நாட்டில் சுவிசேஷத்திற்கு எதிரான எல்லா தடைகளும் அகற்றப்படவும், பிரிவினையை உண்டாக்கும் சக்திகள் அனைத்தும் அதமாக்கப்படவும், சிலுவைக்கொடியானது உயர்த்தி பிடிக்கப்படவும் வேண்டுதல் செய்வோம். இறையாசி உங்களோடு இருப்பதாக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்......

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

## புதிய கைப்பிரதி ..... ஏன் இந்த ஊர்வலம்? வெளியிடப்பட்டது

நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

குருத்தோலை ஞாயிறு வெளியீடு



Palm Sunday Release




குருத்தோலை பவனியை முன்னிட்டு 5000 கைப்பிரதிகளை அச்சிட்டு தென்சென்னை, திருவள்ளூர் பகுதிகளிலுள்ள திருச்சபைகள் மூலம் விநியோகம் செய்ய கிருபைசெய்த தேவாதி தேவனுக்கு மகிமையுண்டாவதாக.

ஸ்பான்சார்: திரு.பா. வில்சன் ஜாபர்கான்பேட்டை, சென்னை-83

நன்றி

கருத்து & எழுத்து: அருட்திரு த. தேவபுத்திரன், சென்னை-84

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக 21-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை இயேசுவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம். மட்டுமல்ல நற்செய்தி பணி செய்வோருக்கு கைப்பிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதியை வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டுமே. கைப்பிரதிகளை Sponsor செய்து நற்செய்தி பரவிட உதவுங்கள். Sponsor செய்யவிரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளுங்கள். கைப்பிரதிகளை இலவசமாகப் பெற்று ஊழியங்களில் பயன்படுத்துங்கள்.

ஏன் இந்த ஊர்வலம்



Why this Procession



குருத்தோலை ஞாயிறு வெளியீடு Palm Sunday Release

# வேதாகம போட்டி–161 சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அன்னாள் ஜெபக்கனி CBE
10) அனி பாய் ஜாண் TIN
11) அனிதா மோகன்ராஜ் ERO
12) அரோமா சாத்ராக் TIN
13) ஆர்தர் மாசில்லாமணி CHE
14) அருள்செல்வி VIR
15) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
16) பாமா மாதவன் KAL-AP
17) பாலின் பிரியங்கா ஜாண் BAN
18) பெல்சி தங்கராஜ் CHE
19) பெனிட்டா பிராங்க்ளின் CHE
20) பெ.ஃ.ட்டி பிரின்ஸ் CHE
21) பியூலா ஜேசுராஜன் PON
22) செலினா பென்சி வில்சன் DR, KUW
23) சந்திராபாய் மாசிலாமணி AVD
24) சந்திரலேகா KAL-AP
25) சந்திரா சாமுவேல் TIN
26) சார்லஸ் ஃபின்னி DR CHE
27) சார்லட் டேவிட் CHE
28) சித்ரபாலா ERO
29) சித்ரா பெஞ்சமின் TVR
30) சிட்டி TR. TVR
31) கிறிஸ்டல் ஜாய் யோபு CKA-TPT
32) கிறிஸ்துதாஸ் GOP
33) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR TIN
34) கிறிஸ்டி ஞானராஜ் CHE
35) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார் TUT
36) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
37) சிந்தி ஜாஷ்வா TAN
38) டெய்ஸி ஜெபதாஸ் TCY
39) டெய்ஸி சாம் KAL-AP
40) டேனியல் தாமஸ் TIN
41) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
42) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
43) தெபோராள் ஆனந்தமணி TUT
44) தேவமணி ஆபிரகாம் TUT
45) தேவநேசம் ராஜாசிங் CHE
46) டோராபாய் CHE
47) எபனேசர் கிரேஸ்லின் சாந்தி TIN
48) எலிசபெத் செல்லத்துரை CHE
49) எமிமாள் மில்டன் CHE
50) எஸ்தர் D.R. TIN
51) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
52) குளோரி ரவீந்திரன் TIN
53) ஞானம் ஜெபராஜ் TIN
54) ஞானம் பிலிப் CHE
55) ஞானராணி G. TVL
56) ஞானசெல்வி மோசஸ் NJ-USA
57) ஞானசுந்தரி நாகராஜன் TIN
58) கோல்டா ஜேசுபாதம் MUM
59) கிரேஸ் டேனி TEN
60) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
61) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
62) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
63) கிரேஸியா ஜெயபால் CHE
64) கிரிசெல்டா செய்லர் CHE
65) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
66) ஹெலன் திலக் TUT
67) ஹேமா அஜீத் CHE
68) ஹேமா கேப்ரியேல் BAN
69) ஹெப்சி அசரியா PON
70) ஹெப்சிபா மங்களராஜ் TIN
71) ஹிம்லா ராஜகுமாரி CHE
72) இளவரசி ஜோபிதா CBE
73) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
74) இந்திரா கெத்ஸி டேவிட் DR. TIN
75) ஜமீலா செல்வராஜ் CHE
76) ஜேன் தர்மராஜ் MAR
77) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
78) ஜான்ஸி சந்தியா MAR TIN
79) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
80) ஜெபா ஜெயராஜ் AVD

81) ஜெபக்குட்டி மோசஸ் TIN
82) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
83) ஜெபசீலி கிளின்டன் CHE
84) ஜெபா சீனி MAR TIN
85) ஜீவா டேவிட் சாலோமோன் APM-TEN
86) ஜெமீலா நிக்ஸன் CHE
87) ஜெனிலா CHE
88) ஜென்ஸி ஞானேஷ் MUM-MS
89) ஜெனித்தா செல்வின் TIN
90) ஜெனிட்டா ஷெருபா ஞானவேல் DHA
91) ஜெரின் ஸ்டீபன் MUM
92) ஜெஸி செல்லதுரை CBE
93) ஜெஸி ஜெயக்குமார் TIN
94) ஜெயா ஆல்பர்ட் KUM
95) ஜோனா ஸ்டீபன் AVD
96) ஜோஸ்பின் ஜெஸி CHE
97) ஜாய்ஸ் பாண்டியன் CHE
98) ஜூலியட் ஜெபா CHE
99) ஜூலியட் ஜெயக்குமார் TIN
100) கலா கிருபாகரன் TIN
101) கலையரசி செல்வராஜ் CHE
102) கஸ்தூரி எலியாஸ் TIN
103) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
104) லதா மைக்கேல்ராஜ் CHE
105) லீலா டேவிட் CHE
106) லீலா ஜோஸப் CBE
107) லீனா எலிசபெத் CKA-TPT
108) லில்லி ஜாண்ஸன் CHE
109) லிஸி டென்சிங் TIN
110) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
111) மல்லிகா V. CHE
112) மணிமேகலை ஜெயக்குமார் TIN
113) மரிய பாப்பா CHE
114) மரியாள் ஜே.எஸ். TUT
115) மேபல் கிறிஸ்டியன் CHE
116) மெஜிலா ஜோஷ்வா TUT
117) மெர்சி ∴புளோரா பாஸ்கர் VEL
118) மெரிட்டா ஜெயபாலன் TCY
119) மியூரியல் புஷ்பராஜ் CHE
120) நகோமி நிர்மலா CHE
121) நிக்ஸன் எவர்பிரைட் TIN
122) ஆலிவ் ஜெயபாலன் CBE
123) பச்சியப்பன் சித்ரகலா ERO
124) பாக்யபாய் ஆரோன் TIN
125) பமீலா எட்வின் KAN
126) பெர்சி பால் பொன்சிங் TUT
127) பிங்க்லின் சந்தோஷ் CHE
128) பிரேமா பூபாலன் AVD
129) பிரேமா ஜானி TEN
130) பிரேமா ஸ்டாலின் CHE
131) பிரேம்குமாரி ஜெய்சிங் CHE
132) பிரின்ஸ் தயாநிதி CHE
133) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
134) பிரிசில்லா தாஸ் CHE
135) பிரிஸ்கில்லாள் சசி CBE
136) பிரியா ராஜ்குமார் CHE
137) ரேச்சல் ஈஸ்டர் VEL
138) ரேச்சல் கனகராஜ் CBE
139) ராஜபிரமீளா TPT
140) ராஜகுமாரி சன்னியாசிமுத்து TUT
141) ராஜ்மேரி சார்லஸ் KER
142) ரமோலா அதிசயராஜ் TIN
143) ராணி ∴புளோரா APM-TEN
144) ராணி பிரபாகர் TIN
145) ராணி சாமுவேல்ராஜ் CHE
146) ரத்னா டென்னிசன் CBE
147) ரத்னாவதி பாண்டியன் CHE
148) ரோஸ்லின் மார்கிரெட் CHE
149) ரோஸி ஸ்டீபன் CHE
150) ரூபவதி நோபிள் TIN
151) ரூத் HAPP-TCY
152) ரூத் ஜாண்ஸன் TIN
153) சலோமி மனோகர் DR. CHE
154) சாம்பு ஜெயச்சந்திரன் MDU
155) சாமுவேல் டேவிட் TPT
156) சாரா பாலசிங் MDU
157) சரோஜா செல்வராஜ் CHE
158) சரோஜினி எலிசபெத் CHE
159) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
160) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
161) செல்வராஜ் K. CBE
162) செல்வராணி ஆல்பர்ட் CHE

**வேதாகம போட்டி–161 சரியான பதிலளித்தோர்– 11ம் பக்கத் தொடர்ச்சி**

163) செல்வி அமிர்தராஜ் TVR
164) ஷாலி எடிசன் CHE
165) சந்தியா ERO
166) சாந்தி ஆல்பர்ட் PCT
167) சாந்தி ஜெபக்கனி KAL
168) சாந்தி ஜெயசீலன் CHE
169) சாந்தி ரோஸ் CBE
170) ஷர்மிளா செல்வராஜ் DR. CUD
171) ஷேபா சந்தோஷ் CHE
172) ஷீபா சாம்ஸன் CHE
173) ஷீலா G. PNR-TVL
174) ஷீலா இஸ்ரேல் TCY
175) சில்வியா ஃபின்னி DR. CHE
176) சவுந்தரம் சாலமோன் CHE
177) ஸ்டெல்லா டேவிட் TUT
178) ஸ்டெல்லா கனகராஜ் CHE
179) சுகிர்தா ஆல்வின் CHE
180) சுகிர்தா சின்னதுரை TIN
181) சுஜாதா சாமுவேல் CHE
182) சுமித்ரா B. CHE
183) சுசீலா தியோடர் TCY
184) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
185) தனசீலி ஞானராஜ் CHE
186) தாரா மாணிக்கம் CHE
187) தெல்மா ஸ்டேன்லி MDU
188) உமா குளோரி CHE
189) வனஜா ஹெர்பர்ட் TIN
190) வசந்தா அன்பன் TIN
191) வசந்தா சந்திரசேகர் CBE
192) வசந்தா துரைராஜ் OFT-TCY
193) வசந்தி கருணாகரன் CHE
194) வசந்தி வாசன் CHE
195) விஜயராணி A. CHE
196) விஜி டேனியல் CHE
197) விமலா ஜெயக்குமார் TUT
198) விண்ணரசி ரோஸ் CHE
199) வினோலியா ஜேம்ஸ் TUT
200) வினோலியா வில்சன் VAN
201) வைலட் கிறிஸ்டோபர் TIN
202) வைலட் சைரஸ் CHE

## வேதாகமப் போட்டி-160
## சரியான பதிலளித்தோர்

1) நகோமி நிர்மலா CHE
2) ஜான்சி சந்தியா MAR

# வேதாகம போட்டி–161 (ரோமர்)
## சரியான விடைகள்

1. கிரியை செய்கிறவனுக்கு ரோம:-4:4
2. தேவனுடைய புத்திரர் ரோம:-8:19
3. தேவனு. வசனத்தால் ரோம:-10:17
4. இஸ்ரவேலர் ரோம:-9:31
5. நியாயப்பிரமாணத்தை ரோம:-13:8
6. தேவ. அருளும் ஈவுக்கு ரோம:-5:16
7. மாறாதவைகள் ரோம:-11:29
8. மாம்ச சிந்தை ரோம:-8:7
9. தவறு - ரோம:-5:20
10. சரி - ரோம:-12:8
11. சரி - ரோம:-8:7
12. சரி - ரோம:-13:10
13. இ - விசுவாசம் ரோம:-4:14
14. ஆ - சாத்தானை ரோம:-16:20
15. அ - இருதயத்தில் ரோம:-2:29
16. இ - கிளைகளும் ரோம:-11:16
17. கிருபை ரோம:-5:20,21
18. பிரிஸ்கில்லா, ஆக்கில்லா ரோம:-16:3-5
19. புத்தியுள்ள ஆராதனை ரோம:-12:1
20. ஆவியானவர் ரோம:-8:26,27

# வேதாகம போட்டி-162

வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். கடைசி நாள்: 25-04-2024

**வேத–பகுதி: 1கொரிந்தியர் முழுவதும்**

1. ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், தேவன் என்ன செய்வார்?
2. எவ்விதமான புளிப்பில்லாத அப்பத்தோடு பண்டிகையை ஆசரிக்க வேண்டும்?
3. எது இறுமாப்பை உண்டாக்கும்? எது பக்திவிருத்தியை உண்டாக்கும்?
4. விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றில் பெரியது எது?
5. சரீர அவயவங்களில் எவைகள் மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது?
6. வேசித்தனம்பண்ணியதால், ஒரேநாளில் விழுந்துபோனவர்கள் எத்தனை பேர்?
7. போரடிக்கிற மாட்டை வாயகட்டாயாக என்று எதில் எழுதியிருக்கிறது?
8. எவர்கள் அடையாளத்தை கேட்கிறார்கள்? எவர்கள் ஞானத்தை தேடுகிறார்கள்?
9. ‘பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்’ - **சரியா தவறா**?
10. ‘அன்பு ஒருக்காலும் ஒழியாது’ - **சரியா தவறா**?
11. ‘நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்ப்போம்’ - **சரியா, தவறா**?
12. ‘மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயத்தீர்ப்பு’ - **சரியா தவறா**?
13. ‘**இது**’ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் ‘**இதற்கு**’ உரியவர்:
அ) சரீரம் ஆ) ஆத்துமா இ) ஆவி ஈ) வாழ்வு
14. ‘**இவன்**’ எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்:
அ) ஆவிக்குரியவன் ஆ) விவேகி இ) ஞானி ஈ) தேவமனிதன்
15. நீங்கள் ‘**இதற்கு**’ கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகள் ஆகாதிருங்கள்:
அ) பரிதானம் ஆ) அடைமானம் இ) கிரயம் ஈ) கடன்
16. தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, ‘**இதிலே**’ உண்டாயிருக்கிறது:
அ) கிரியையிலே ஆ) விசுவாசத்திலே இ) பெலத்திலே (ஈ) கிருபையிலே
17. அதிகாரி நல்ல அதிகாரி! ஆம்பளை இந்த அதிகாரி! பொம்பளை மீது அதிகாரி! அதிகாரி நல்ல அதிகாரி! பொம்பளை இந்த அதிகாரி! ஆம்பளை மீது அதிகாரி! **யார் இந்த அதிகாரிகள்?**
18. பெண்ணுக்கு இது நீளமானால் மகிமை! ஆணுக்கு இது நீளமானால் மடமை! ஆண் இதை வளர்த்தால் வெட்டவேண்டும்! பெண் இதை மூடாவிடில் வெட்டவேண்டும்! **இது என்ன? இது என்ன?**
19. நிலைப்பது மூன்று! நிலைத்த மூன்றில் பெரியது **இது**! ஒழிந்துபோவது மூன்று! ஒழியும் மூன்றைப்போல் ஒழியாது **இது**! **இது என்ன? இது என்ன? 6ம் என்ன?**
20. ஆவியின் இரகசியப் பேச்சு! அனைவரும் அறியாத பேச்சு! ஆண்டவரிடம் பேசும் பேச்சு! இது என்ன? **இது என்ன பேச்சு?**

பதிலளிக்க கடைசி நாள்: 25-04-2024 படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ்,
எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

EPISODE-59

பாகம்-59



SIS.C. ANGEL

ஜீவனுள்ள கல்லாகிய இயேசுவின் சொந்தமான நீங்கள், ஆவிக்குரிய மாளிகை யாகவும், பரிசுத்த ஆசாரிய கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள். 1பேது–2:4,5

You, who belong to Jesus, the living stone, are being built into a spiritual house and a holy priesthood. 1Peter-2:4

The living stone — Zontes Lithon

## ஜீவனுள்ள கல்

'சோ'ன்டஸ் லீத்தோன்

ஜீவனுள்ள கற்களைப்போல் ஆவிக்கேற்ற மாளிகையாக நம்மை சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி நிலைநிறுத்துகிற இயேசுவின் நாமத்தில் துதியின் வாழ்த்துக்கள்.

**தானி-2:31-45** கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் (இயேசு) உருண்டு வந்து, மிகுந்த பிரகாசமும் பயங்கரமான ரூபமுமுள்ள பெரிய சிலையின் இரும்பும் களிமண்ணுமாகிய பாதங்களில் மோதி அவைகளை நொறுக்கிப்போட்டது. சிலைமீது மோதிய கல்லோவென்றால் (கிறிஸ்து) ஒரு பெரிய பர்வதமாய் உரு-மாறி பூமியையெல்லாம் நிரப்பிற்று. ஆம், இந்த கடைசி காலத்தில் தேவன், என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார். சகல கர்த்தத்துவங்களும் கர்த்தரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்.

தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொரு நாளும் வளரும்படிக்கு, புதிதாய் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின் மீது வாஞ்சையாய் இருக்கும்படி செய்து, தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்கு, பரிசுத்த ஆசாரியக் கூட்டமாக நம்மைக் கட்டு விக்கிறார் (1பேதுரு 2:2-5).

நாம் யார்? எனில், கிறிஸ்துவின் நிருபமாய் இருக்கிற அவருடைய ஊழியக்காரர் (2கொரி-3:3). இது, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினால், சதையான பலகை களில் (கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபை) எழுதப்பட்டிருக்கிறது.

இதுவரை தடையாக இருந்த கல்லை, மின்னலைப்போன்ற ரூபமும், உறைந்த மழையைப் போன்ற வெண்மையான வஸ்திரத்தையுமுடைய கர்த்தருடைய தூதன் புரட்டித்தள்ளி, அதன் மீது உட்கார்ந்தான் (மத்-28:2,3).

**ஜெபம்:** உயிர்த்தெழுந்த கர்த்தராகிய கிறிஸ்துவே! உம்மைத் துதிக்கிறோம். ஜீவனுள்ள கல்லாகிய நீர் எங்களுக்குள் இருந்து செயலாற்ற உமது கரத்தில் எங்களை அர்பணிக்கிறோம். பெரிய பர்வதமானது, எங்களுக்கு முன் சம-பூமி ஆகும்படிக்கு உமது கிருபையையும் வல்லமையையம் ஊற்றி பயன்படுத்துவீராக. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம். ஆமென், பிதாவே, ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
C. Angel

தேன்-துளி வேத வசனக் கதை-155•

# பேராசை என்னும் உயிர்க்கொல்லி

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A., M.ED.

ஒரு கிராமத்தில் 3 சகோதரர்கள் வசித்து வந்தார்கள். அவர்களது தந்தை பெரும் செல்வந்தர்; ஏராளமான நிலங்களுக்கும் கட்டிடங்களுக்கும் சொந்தக்காரர். சகோதரர் 3பேரும் நன்கு படித்து இஞ்சினியரிங் கோர்சில் தேர்ச்சி அடைந்தனர். பின்னர், மும்பை நகருக்குச் சென்றனர். அங்கு மூவரும் வெவ்வேறு கம்பெனிகளில் இஞ்சினியர் பணியில் நல்ல ஊதியத்தில் அமர்ந்து ஒரே வீட்டில் தங்கி மகிழ்ச்சியாய் வாழ்ந்தனர்.

நாட்கள் சென்றன, அவர்களுடைய அன்பு குறைந்து பேராசை தலைதூக்கியது. மூத்த வர்கள் இருவரும், இளைய சகோதரனை கொன்று விட்டால் தந்தையின் சொத்தில் அதிக பங்கு கிடைக்கும் என எண்ணினார்கள். இளையவனோ, அண்ணன்மார் இருவரை யும் கொன்று விட்டால் எல்லா சொத்துக்களும் தனதாகிவிடும் என நினைத்தான்.

ஒரு நாள் இளையவன் சகோதரர்களை நோக்கி, ‘‘இன்று என் கம்பெனியில் மாபெரும் விருந்து ஒன்று நடக்கிறது; எனவே, இரவிலே விருந்து முடிந்து நான் வரும்போது உங்களுக்கு இரவு உணவாக பிரியாணி பொட்டலம் கொண்டு வருகிறேன்’’ என கூறிச் சென்றான். இரவில் வரும்போது இரண்டு பிரியாணி பார்சல்களுடன் வந்தான். வரும் வழியிலே பார்சல்களைப் பிரித்து அதில் விஷத்தைக் கலந்து மீண்டும் பார்சல் செய்து அவற்றைக் கொண்டுவந்து தனது சகோதரர் இருவருக்கும் கொடுத்தான்.

இதற்குள், மூத்த சகோதரர் இருவரும் இளையவனை கொன்றுவிட்டு பிரியாணியை சாப்பிடலாம் என திட்டம் தீட்டி, அதன்படி இருவரும் சேர்ந்து இளையவனை தலையில் கட்டையால் அடித்து, அவனைக் கொன்று ஆற்றில் எறிந்துவிட்டு வீட்டிற்கு வந்து விஷம் கலந்த பிரியாணியை உண்டனர். சிறிது நேரத்தில் இருவரும் மயங்கி விழுந்து உயிர் துறந்தனர். தகப்பன் சொத்துக்கள் ஏராளமாக இருந்தும் தங்கள் பேராசையின் விளைவாக மூவரும் அவற்றை அனுபவிக்க முடியாமல் மாண்டுபோனார்கள்.

பிரியமானவர்களே! நம் வாழ்விலுங்கூட, நம் பெற்றோர் நமக்காக சேர்த்துவைத்த சொத்துக்களை நமக்குள் சமமாக பங்கிட்டு, மகிழ்ச்சியாய் வாழ்வதையே ஆண்டவராகிய இயேசுவும் விரும்புகிறார். தினமும் நாம் காண்கிற காட்சிகள் மற்றும் கேள்விப்படுகிற செய்திகளில், ஒரு-அடி நிலத்துக்காகக்கூட சகோதரர்கள் இவ்வித வன்முறையில் ஈடுபடுவதை நாம் அறிகிறோம். நாமும் ஒருவருக்கொருவர் அன்பாய் இருக்கவேண்டும் என்பதையே தேவகட்டளையாக வேதத்தில் வாசிக்கிறோம்.

ஆகவே, இந்நிலைகளில் நாம் குறைவுபடுவோமானால், நம்மை நாமே சரிசெய்துகொள்வோம். வேதம் இவ்வாறு கூறுகிறது,

சகோதர சிநேகம் உங்களில் நிலைத்திருக்ககடவது. எபி 13:1.

சகோதர அன்பில் இன்னும் அதிகமாய் பெருகுங்கள். 1தெச 4:10.

சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது. சங் 133:1


சகோ. அசரியா

## இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

EPISODE 21

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
# இரண்டாம் வருகைக்குத் தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-5 பகுதி-1

**5. ஜெசுவைட்ஸ்ும் இந்திய திருச்சபையும்**
**1. ஜெசுவைட்ஸ் - பிரான்சிஸ் சேவியர்...**
**கோவா வருகை (ரோம் - லிஸ்பன் - கோவா)...**

பிரான்சிஸ் சேவியர் ஸ்பெயின் நாட்டில் கி.பி.1506ம் ஆண்டு ஏப்ரல் 7ம் நாள் புகழ்மிக்க சேவியர் அரண்மனையில் பிறந்தார். தன்னுடைய ஒன்பதாம் வயதில் தந்தையை இழந்த இவர் தாயின் பராமரிப்பிலேயே அதே அரண்மனையில் படித்து வந்தார். அப்போதே ‘ஸ்பானிஷ்’ மற்றும் பல மொழிகளில் புலமை பெற்றிருந்தார். கி.பி. 1525ம் வருடம் கல்லூரி படிப்பிற்காகப் பாரிஸ் சென்றார். தொடர்ந்து 11வருடங்கள் பாரிசிலே தங்கியிருந்த புனித சேவியர், அங்குள்ள புனித பற்பே கல்லூரியில் தத்துவம் மற்றும் கலைத்துறையில் முதுகலை பட்டம் பெற்று, கி.பி. 1530 முதல் 1534 வரை விரிவுரையாளராகவும் பணி யாற்றினார். மீண்டும் கி.பி. 1534 முதல் 1536 வரை இறையியலைப் பயின்றார். அப்போது புனித சேவியருக்கு, புனித லொயோலா நண்பரானார். ‘‘மனிதன் இந்த உலகையே தனக்கு ஆதாயமாக்கினாலும் தம் ஆன்மாவை இழப்பானாகில் அதனால் அவனுக்கு வரும் பயன் என்ன?’’ என்ற இறைமகன் இயேசுவின் வார்த்தையை லொயோலா, சேவியருக்கு எடுத்துரைக்க சேவியர் அவ்வார்த்தை யின் ஆழத்தை உணர்ந்து இறைவனோடு அதிகமாய் இணைந்திருந்தார். பின்னர் இவர்கள் இயேசு சபையைத் தொடங்கினர். இதில் மீண்டும் நான்கு நண்பர்கள் சேர்ந்து இறைபணியை செய்ய முடிவு செய்தனர்.

புனித பிரான்சிஸ் சேவியர், லிஸ்பன் நகரில் ஓராண்டு இறைப்பணி செய்த பின்னர், இந்தியாவிற்கு கப்பல் பயணத்தை மேற்கொண்டார். கி.பி. 1542ம் ஆண்டு மே மாதம் 6ம் தேதி கோவாவை வந்தடைந்த அவர், முதல் நான்கு மாதங்கள் கோவாவில் இறைப்பணி செய்தார். பின்னர், கோவாவிலிருந்து

கேரளா வழியாக தென் தமிழ்நாட்டுக்கு வந்து, அங்கு பல பகுதிகளில் தங்கி இறைப்பணியாற்றினார். குறிப்பாக, கன்னியாகுமரி, கோட்டயம், குளச்சல், ஆலந்தலை, தூத்துக்குடி மற்றும் மணப்பாடு பகுதிகளில் தங்கியிருந்து இறைப் பணியாற்றி வந்தார்

கி.பி. 1543ல் தென்திருவிதாங்கூரில் அதாவது, தற்போதைய கன்னியாகுமரி மாவட்டத்தில் தன் இறைப்பணியைத் தொடர்ந்தார். சுமார் பதினைந்து மாதங்கள் கிராமங்கள் தோறும் மணியடித்துக்கொண்டு சென்று, அங்கு ஆட்கள் கூடியதும் அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றிய செய்திகளைக் கூறியும் நோயாளி களைச் சந்தித்தும் வந்தார். திருவிதாங்கூர் இராஜ்ஜியத்தில் பல ஆலயங்கள் புனித சேவியரால் நிறுவப்பட்டன. மிகக் குறுகிய காலத்துக்குள் (ஒரு வருடத்திற்குள்) நாற்பத்தி ஐந்து சிறிய கிறிஸ்தவ ஆலயங்களை அப்பகுதியில் அவர் நிறுவினார் என்று வரலாறு நமக்குச் சொல்லுகிறது.

புனித சேவியர், சுமார் 38 ஆயிரம் மைல்கள் கடல் மற்றும் தரை மார்க்கமாய்ப் பயணம் செய்து இறைப்பணியைச் செய்துள்ளார். கடைசியாக சீனாவிலுள்ள சாங்சோங் தீவில் இருந்தபோது நோயினால் பாதிக்கபட்டார். இவரை ஜார்ஜ் அல்வரேஸ் என்னும் போர்த்துக்கீசியர் கவனித்து வந்தார். இருப்பினும், சிகிச்சை பலனளிக்காததால் கி.பி. 1552ம் வருடம் டிசம்பர் 3ம் நாள் உயிர் துறந்தார். ஜார்ஜ் அல்வரேஸ், பிரான்சிஸ் சேவியரை அத்தீவிலேயே அடக்கம் செய்துவிட்டுச் சென்று விடுகிறார்.

சேவியரின் கூட இருந்த அவரது சீன நண்பர் அந்தோணியோ டி சான்றா, சுமார் இரண்டரை மாதங்களுக்குப் பின், அதாவது கி.பி. 1553ம் ஆண்டு பெப்ருவரி 17ம் நாள் அத்தீவின் வழியாக வரும்போது புனிதரின் கல்லறையைத் தோண்டி அவரது எலும்புகளையாவது இந்தியாவுக்கு எடுத்துச் செல்லலாம் என்ற முயற்சியில் சேவியரின் உடல் வைக்கப்பட்டிருக்கும் கல்லறையைத் தோண்டி அவரது உடல் இருந்த பெட்டியை எடுத்து அதைத் திறந்தபோது அவரது உடல் எந்தப் பாதிப்பும் இல்லாமல் வைத்தது வைக்கப்பட்டது போலவே இருந்தது. பின்னர் அவரது உடலை சாந்தா குரூஸ் என்னும் கப்பலில் ஏற்றி போர்ச்சுக்கீசிய-மலாய் தீபகற்பத்திலுள்ள மலாக்கா நகருக்கு எடுத்துச்சென்றனர். மார்ச் 22, 1553ல் மலாக்கா வந்தடைந்த சேவியரின் உடலைப் பார்த்தபோது அது இன்னும் கெட்டுபோகாமல் நறுமணம் வீசியது. எனவே, சேவியரின் உடல் அங்குள்ள தூய. பவுல் ஆலய கல்லறைத் தோட்டத்தில் மீண்டும் அடக்கம் செய்யப்பட்டது.

இரண்டு மாதங்களுக்குப் பின்னர் தந்தை பெய்ரோ புனித சேவியரின் உடலைக் கோவா கொண்டுசெல்ல உத்தரவிட்டார். இதன்படி டிசம்பர் 11, 1553ல் புனித சேவியரின் உடல் கோவாவுக்கு கொண்டுவரப்பட்டது. அங்கும் சேவியரின் உடல் கெட்டுபோகாமல் நறுமணம் வீசியதால் அது பூமிக்குள் அடக்கம் செய்யப் படாமல் கோவாவிலுள்ள Basilica of Born Jesus என்ற தேவாலயத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது. 450 வருடங்களைத் தாண்டிய பின்னரும் அது கெட்டுப்போகாமல் இன்றும் மக்கள் பார்க்கும்படியாக அங்கு காட்சியளிக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டம், கோட்டாறில் சேவியர் தங்கிருந்த போது அன்னை மரியாளுக்கு ஆலயம் ஒன்றை கட்டினார். அந்த ஆலயத்தின் மேல் கி.பி. 1600ல் புனித சேவியர் பேராலயம் ஒன்று கட்டப்பட்டது. சேவியர் கட்டிய ஆலயம் இந்த பேராலயத்தினுள்ளே இன்றளவும் உள்ளது. புனித சேவியர் இந்தியாவில் கிறித்துவத்தின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றினார்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd., (Pope's College, Sawyerpuram)
Thiruvanmiyur, Chennai. South India

# PRAYER-WINDOW PRAYER-WINDOW

# ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் ஏப்ரல் - 2024

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 12-04-2024 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 19-04-2024 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 26-04-2024 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி **''தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க''** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**CONTACT DETAILS:**

MOBILE:
9962924900/7871676100
WHATSAPP:
9789914463/7871676100
E-MAIL:
sjddharmaraja@gmail.com
POSTAL ADDRESS:
REV. S.J.D. DHARMARAJA,
MISSION DIRECTOR,
NO: 4/2-A, BARATHI ST.,
GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93

**BANK DETAILS:**

NAME:
DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO:
601071548.
BANK & BRANCH:
INDIAN BANK, NESAPAKKAM
IFSC CODE:
IDIB000N122.
BANK ADDRESS:
NESAPAKKAM, CHENNAI-78.

**UPI DETAILS:**

GOOGL-PAY (G-PAY) NAME:
REV. DHARMARAJA SJD
G-PAY NUMBER:
9789914463
QR CODE
FOR SCANNING
OUR WEBSITE:
www.ratchippu.com

Rev. Dharmaraja S.J.D
UPI ID: sjddharmaraja@okhdfcbank

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

Mrs. Jeyaseeli Dharmaraja, F-1, 1st floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93. E-mail: sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463

ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST

# ஜெப-ஜன்னல் ஜெப-குறிப்புகள்

கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - Come! Let us all intercede to God

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹாமாஸ் போர் மற்றும் உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பேரிடர்களின் சேதங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... நடைபெறவிருக்கும் இந்திய பாராளுமன்ற தேர்தல்கள் நேர்மையாக நடைபெற... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பவர்களின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட... சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள், இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வர... தமிழ்நாட்டில் மத-வாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) பிரி-கே.ஜி முதல் பி.ஹெச்.டி வரையில் இறுதித் தேர்வை எழுதியுள்ள நம் பிள்ளைகளுக்கு நல்ல ரிஸல்ட் கிடைக்க... 12ம் மற்றும் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதியிருகக்கிற நம் பிள்ளைகள்ண, சிறப்பாக 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதியுள்ள எஸ்தர் பெரின், ஜசிந்த் ஹேனா, ஷீபா ஆகியோருக்கு சிறந்த ரிஸல்ட் கிடைக்க...

6) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் ஜேசன், சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், DR. கிறிஸ்டினா, கிப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோப்னா ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

7) REV. கருணாகரன், திரு. நெல்சன் (நகோமி), திரு. வெஸ்லி சாமுவேல், திரு. ஆபிரகாம் மனோகர், திரு. டெம்பிள் வில்லியம், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திரு. அப்பன் டேவிட், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி திருமதி. ஜெயசீலி தர்மராஜா, திருமதி. வி. மல்லிகா, REV. தர்மராஜா, திரு. ஜூலியன், திரு. அருள்சிங் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

8) திரு. யாபேஸ் சாமுவேல், திருமதி. பால், திருமதி. ராஜேஷ்வரி, திரு. டேனியல், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், DR.ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

9) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. ரூபி போஸ்கோ, திரு. நிக்ஸன் எவர்பிரைட், திருமதி. சிந்தி ஜாஷ்வா, திருமதி. மியூரியல் புஷ்பராஜ், திருமதி. கிறிஸ்டி ஞானராஜ், திருமதி. கலையரசி செல்வராஜ், திருமதி. ஸ்டெல்லா கனகராஜ், திருமதி. ஜெயா ஆல்பர்ட், திருமதி. சுஜாதா சாம், திருமதி. ஷீலா இஸ்ரவேல், திரு. ஜே.ஆர். டேவிட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. லிஸி லிவிங்ஸ்டன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்பத்தாருக்காக..

**Ratchippu Tamil Monthly. Registered News Paper.**
**Date of Publication: First week of every month**
**RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.**
**Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.**
**Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 10th April 2024.**
**Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.**

# செய்தித்துளிகள்

1. வரும் நவ-2024ல் நடைபெறும் அமெரிக்க அதிபர் தேர்தலில், ஜனநாயக கட்சி சார்பில் அதிபர் ஜோ பைடனும், குடியரசு கட்சி சார்பில் முன்னாள் அதிபர் டோனல்ட் டிரம்பும் நேருக்கு நேர் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது.

2. இஸ்ரோவின் 'புஷ்பக்' விண்கல சோதனை வெற்றி. மனிதர்களுடன் விண்வெளிக்கு சென்று, திரும்பவும் பூமியில் தரையிறங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட 'புஷ்பக்' விண்கலம் பூமியின் ஓடுபாதையில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

3. பாராளுமன்ற தேர்தலை முன்னிட்டு தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் 1 முதல் 9 வரையிலான வகுப்புகளுக்கு ஆண்டிறுதித் தேர்வுகள் ஏப்ரல் 12வரை நடத்தப்பட்டு ஏப்ரல் 13ம் தேதி கோடை விடுமுறை அளிக்கப்படும் என அறிவிப்பு.

4. மின்-வாரியத்தில் மின்-மீட்டர் பற்றாக்குறை காரணமாக, புதிய வீட்டு-மின் இணைப்புகளுக்கான மின்-மீட்டர்களை தனியார் நிறுவனங்களிடம் இருந்து நுகர்வோர் வாங்கிக் கொள்ள தமிழ்நாடு மின்வாரியம் அனுமதி.

5. பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் வரும் ஜுலை-26ல் தொடங்கும் 33-வது ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய ஹாக்கி-அணி 'பி' பிரிவில் தனது தொடக்க போட்டியில் ஜுலை-27ம் தேதி நியூசிலாந்து ஹாக்கி அணியை எதிர்கொள்கிறது.

Posted on: 10th April 2024

To

## உலக புவி நாள் நல்வாழ்த்துகள்

**இரட்சிப்பு** **HAPPY EARTH DAY**

பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப வீரர்கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், வேதாகம போட்டிகளில் பங்கு பெறுவோர், அச்சகத்தார், தபால்-துறை அன்பர்கள், மற்றும் இரட்சிப்பு விசுவாசக் குடும்பத்தார் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த **உலக புவி-நாள் நல்வாழ்த்துக்கள்.**

**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்




**Earth Day - 22, Apr 2024**

If undelivered Please return to:
**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.